# வட-கிழக்கு இணைப்புக்கு இலங்கை அரசு எதிர்ப்பு; எனவே தொடர்ந்து பேசுவதில் பயன் உண்டா?

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 2-8-86 சனி (ஆடி 17 துல்க 25) முழக்கம் 179

## அமிர் டில்லியில் கேள்வி

வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்து காட்டிவரும் எதிர்ப்புப்பற்றி நேற்று புதுடில்லி அதிகாரிகளைச் சந்தித்து பேசியபோது கூட்டணிக் குழுவினர் தங்கள் கவலையை வெளியிட்டனர். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதில் ஏதாவது பயன் ஏற்படுமா என்ற தங்களின் ஐயப்பாட்டையும் இவர்கள் எடுத்துக்கூறினர். திருவாளர்கள் அ அமிர்தலிங்கம், மு சிவசிதம்பரம். இரா. சம்பந்தன் ஆகியோரைக் கொண்ட கூட்டணிக்குழு நேற்று முன்தினம் புதுடில்லி சென்றது. இந்திய கொள்கை விவகார ஆலோசனைக் குழுத்தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி, வெளியுறவு அமைச்சின் செயலர் திரு ஏ. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோரை நேற்று குழுவினர் சந்தித்துப் பேசினர். இப்பேச்சுவார்த்தையின் விபரங்கள் வெளியிடப்படவில்லையாயினும் வடக்கு கிழக்கு இணைப்பு பற்றியே இவர்கள் ஆராய்ந்ததாகக் கூறப்பட்டது. காணிக் குடியேற்றம், சட்டம், ஒழுங்கு போன்ற விடயங்களில் மாற்றுத் திட்டமொன்றை இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள —6ம் பக்கம் பார்க்க

★ கொழும்பு உயர் மாநாட்டில் ராணுவ அதிகாரி அறிவிப்பு

# வடக்கிலுள்ள ராணுவ முகாம்கள் ஒருபோதும் மூடப்பட மாட்டா!

## போராளிகளின் முக்கிய 26 முகாம்களையும் நிர்மூலமாக்கும் நேரம் வந்துவிட்டது!

(கொழும்பு)

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஆயிரம் மீற்றர் சுற்றளவுக்குள் இருக்கும் மக்கள் இனிமேல் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு கவுன்சிலின் அதிமுக்கிய கூட்டமொன்றில் தெரிவிக்கப்பட்டதாக நம்பத்தக்க வட்டாரங்கள் தகவல் தந்தன.

இக்கூட்டத்தில் உரையாற்றிய வடபகுதி இராணுவ மேலிடத்தின் அதிசிரேஷ்ட அதிகாரி ஒருவர் கடந்த திங்கட்கிழமை கோட்டை இராணுவ முகாமில் போராளிகளின் தாக்குதலால் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டது குறித்து குறிப்பிடுகையில் இப்பகுதியில் வதியும் பொது மக்களின் ஒத்துழைப்புடனேயே இத்தாக்குதல் தீவிரவாதிகளால் ஆயிரம் மீற்றர் சுற்றளவுக்குள் இருந்து மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தினரும் பதிலுக்கு தாக்குதல் நடத்தியிருந்தால் இவ் எல்லைக்குள் வசிக்கும் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட நேர்ந்திருக்குமென்றும் இனிமேலும் இத்தகைய சம்பவம் நிகழுமிடத்து எச்சரிக்கையோ முன்னறிவிப்போ இன்றி இரட்டிப்பு மடங்கான பதில் தாக்குதல் படையினரால் மேற்கொள்ளப்படுமென்றும் காட்டமாக தெரிவித்ததாகவும் அறிய வந்துள்ளது.

வடபகுதியில் போராளி —6ம் பக்கம் பார்க்க

### பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில்

## மத்திய கல்லூரி, வேம்படி நிலைமை பற்றி திங்கள் முடிவு

யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவைகளின் எதிர்காலம் பற்றி பாதுகாப்புப் படையினர் அடுத்த திங்கட்கிழமை முக்கிய முடிவெடுக்கவுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்பட்டதாயினும், அடுத்த திங்கட்கிழமை கூட்டத்தில் முடிவெடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

வடபகுதி ராணுவ, கடற்படை, விமானப்படை முகாம்களின் முக்கிய அதிகாரிகள் பலரும் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## ஒட்டுசுட்டான் மோதலில்...

மாங்குளத்துக்கும் ஒட்டுசுட்டானுக்குமிடையில் நேற்றுப் பிற்பகலளவில் ஏற்பட்ட இருதரப்பு மோதலில் சுமார் இருபது பேரளவில் பலியானதாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா இடமாற்றம்

யாழ். மாவட்ட ராணுவ இணைப்பதிகாரியாகக் கடமையாற்றும் பிரிகேடியர் எச் ரூபசிங்கா இங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஆனாலும் இவர் எப்போது இங்கிருந்து செல்வார் என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை. அண்மையில் ஒய்வு பெறும் வயதை எட்டிய பிரிகேடியர் ரூபசிங்கா சேவை நீடிப்பு வழங்கப்பட்டு இங்கு கடமையாற்ற அனுமதிக்கப்பட்டார்,

இவரது இடத்துக்கு பிரிகேடியர் ஜெரிசில்வா யாழ். மாவட்ட இணைப்பதிகாரியாக நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## புலி ஷேர்ட்

(நெடுந்தீவு)

நயினாதீவு இறங்கு துறையில் விடுதலைப் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட 'ரீஷேர்ட்' அணிந்த இளைஞர் ஒருவர் உலாவுவதைக் கண்ட பொதுமக்கள் —6ம் பக்கம் பார்க்க

### புலிகள் அறிவிப்பு

## கட்டைபறிச்சான் சமரில் நான்கு ராணுவத்தினர் பலி

திருமலையிலுள்ள கட்டைபறிச்சான் ராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை வெளியே வந்த ராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிமோதலில் நான்கு ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பல இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளார்கள்.

இம் முகாமிலிருந்து புறப்பட்ட நூறுக்கும் மேற்பட்ட ராணுவத்தினர் முகாமிலிருந்து ஐநூறு யார் தொலைவில் வந்துகொண்டிருந்த போதே தாம் —6ம் பக்கம் பார்க்க

### வசாவிளானில்

## இரண்டு குடும்பஸ்தர்கள் வீட்டுக்கு செல்கையில் கைது

வசாவிளான் ராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள தமது வீடுகளைப் பார்ப்பதற்கும், அங்குள்ள சில பொருட்களை எடுப்பதற்கும் தமது மனைவிமாருடன் சென்ற இருவர் பதுங்கியிருந்த ராணுவத்தினரால் லபெக்கென பிடிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் சத்தியசீலன் (33), திருநாவுக்கரசு (45), ஆகிய இருவர் தமது மனைவிமாருடன் வசாவிளான் மகா வித்தியாலய மேற்கு பகுதியிலுள்ள தமது வீட்டுக்கு ...6ம் பக்கம் பார்க்க

## ராஜீவ் வெங்கடேஸ்வரனுடன் இனப்பிரச்சினைபற்றி பேசினர்

(புதுடில்லி)

பாரதப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. பி. வெங்கடேஸ்வரனுடன் தனிமையில் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக பேசியதாக பி. ரி. ஐ. அறிவித்துள்ளது.

இப்பேச்சுவார்த்தை சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் நீடித்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு இணைப்பில் இருந்து வரும் இழுபறிசம்பந்தமாகவே நீண்டநேரம் ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் பாரதத்தின் கொழும்புத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் இந்தப் பேச்சுவார்த்தையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இப்பேச்சுக்கள் சுமார் அரைமணி நேரத்துக்கு இடம்பெற்றது.

கூட்டணிக்குழுவினர் பிரதமரை இன்று அல்லது நாளை சந்திக்கக் கூடுமெனவும் பி.ரி.ஐ. மேலும் அறிவித்துள்ளது.

## கிளிநொச்சி பஸ் டிப்போ இயங்க முடியாத நிலையில்

இரண்டு மாத இடைவெளிக்குப் பின் கடந்த சில தினங்களாக இயங்கிய வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி டிப்போ மீண்டும் இயங்க முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளது.

சில தினங்களுக்கு முன் கிளிநொச்சி டிப்போ அதன் பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பித்த போது ஆனையிறவுக்கு —6ம் பக்கம் பார்க்க

## நயினாதீவு நாகபூஷணி அம்மன் உற்சவ விபரங்கள்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 5ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு பகல் திருவிழா காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகி பகல் பதினொன்றரை மணிக்கு முடிவடையும் எனவும், மாலைத் திருவிழா பிற்பகல் ஒன்றரை மணிக்கு ஆரம்பமாகி ஐந்தரை மணிக்கு முடிவடையுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

—6ம் பக்கம் பார்க்க

# 'விளையாட்டுகள் பண்பு வளரவும் வித்திடுகின்றன'

(சாவகச்சேரி)

"வகுப்பறைக் கல்வியோடு விளையாட்டுத்துறையும் மாணவர்களுக்கு அத்தியாவசியமானவை விளையாட்டுக்கள் மூலம் பெரியபண்புகளை மாணவர்கள் சிறு வயதிலிருந்தே உணர்ந்து நடக்க முடியும். அதே நேரத்தில் ஆறு வயதிற்குட்பட்ட பச்சிளங் குழந்தைகளை இத்துறையில் பயிற்றுவிப்பதென்றால் அது ஓர் சாதாரணமான விடயமல்ல. இதை ஒரு சாதனை என்றுதான் கூறுவேன். இந்த மாபெரும் சாதனையை நிலைநாட்டிய ஆசிரியர்களையும் அவர்களுக்குப் பக்கஉதவியாக இருந்த பெற்றோரையும், நான் பாராட்டுகிறேன்."

இவ்வாறு தென் மட்டுவில் மாதர் சங்கத்தினால் நடத்தப்படும் தேனொளி பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்திய தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா கூறினார்.

மாதர்சங்கத் தலைவி திருமதி மனோஹரி செல்லையா தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டு விழாவில், பச்சிலைப் பள்ளிப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கந்தசாமி, உதவி கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. பரராஜசிங்கம் கிராம சேவை அலுவலர் திரு. இராஜரத்தினம் உட்பட பல அரச அதிகாரிகளும், ஏராளம் பெற்றோர் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து, "இப்படியாக ஒரு மாதர் சங்கத்தின் சேவைகளை மதிப்பீடு செய்யும் இதன் சேவை மகத்தானது எனவே இப்பாலர் பாடசாலைக்குப் பல பெற்றோர் தாராளமாக ஊஞ்சல்போன்ற உபகரணங்களை வழங்கியுள்ளனர். எனவே நானும் 1987ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் கீழ் இந்த மாதர் சங்க அலுவலகத்தின் சுற்றுமதிலை அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். இப்பாலர் பாடசாலை நல்ல தொண்டு செய்ய வேண்டும். இதில் பயிலும் பிள்ளைகள் கல்வியில் உயர்வடைய வேண்டும். இதேவேளையில் இந்த மாதர் மன்றம் உருவாகுவதற்கு உறுதுணையாக இருந்த முன்னாள் எம். பி. திரு. வி. என். நவரத்தினம், செல்வி சிரோன்மணி இராஜரத்தினம் ஆகியோரையும் இங்கு நினைவு கூரவேண்டியது அவசியம்" என்றும் அவர் சொன்னார்.

தலைவர் திருமதி மனோஹரி செல்லையா தனது தலைமை உரையில், "இப்பாடசாலைக்கு ஊஞ்சல் போன்ற உபகரணங்களைக் கொடுத்து இப்பாலர்களை ஊக்குவித்த பிரமுகர்களைப் பாராட்டியதுடன் மேலும் பலர் பல அத்தியாவசிய உதவிகளை உவந்து செய்ய முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேற்படிப் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள், 'ஜமுனா கங்கா' இல்லங்களுக்கிடையில், ஆறுவயதிற்குட்பட்ட பச்சிளம் பாலகர்களுக்கிடையில், மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றன. ஜமுனா இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

25 மீற்றர் ஓட்டம் முதல், முயற்பாய்ச்சல், தாரா நடை, பழம் பொறுக்குதல், தவளைப் பாய்ச்சல், எண் நுட்பம், எழுத்தோட்டம், கப்பினால் நீர் நிரப்பல், பாடசாலை ஆயத்தம், நிறம் சேர்த்தல், யானைக்கு வால்வைத்தல், பணிஸ் உண்ணல், கொக்கோகோலா, பந்து கடத்தல் போன்ற சுமார் 28 விளையாட்டுகளுக்கான போட்டிகள் நடைபெற்றன.

## விவசாயக் கருத்தரங்கு

மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் ஆரும் திகதி புதன்கிழமை காலை பயிர்ப் பாதுகாப்பு பற்றிய விவசாயக் கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தினரும், விவசாய இலாக்காவின் விரிவாக்க ஆராய்ச்சிப் பகுதியினரும் இணைந்து நடாத்தும் இக்கருத்தரங்கில் பயிர்வகைகளைத் தாக்கும் பூச்சி பீடைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

# குருநகர் மீனவர் நிதிக்கு 2 லட்சத்து 22 ஆயிரம் ரூபா

(குருநகர்)

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்கள் முப்பது பேர்களது குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தால் சேகரிக்கப்பட்டுவரும் நிவாரண நிதிக்கு இதுவரை இரண்டு லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து நாற்பத்து மூன்று ரூபா சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிதியில் சேர்ப்பதற்காக பல்வேறு இடங்களிலும் சேகரிக்கப்பட்ட நிவாரண நிதிகளையும், மேலும் வழங்க இருப்பவர்களையும் விரைவில் குருநகர் சங்கச் செயலாளரிடம் ஒப்படைத்து பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி நிதி வழங்குவோரைச் சங்கத்தின் முகாமையாளர் திரு. டேமியன்சூரி கேட்டுள்ளார்.

முழுதாகச் சேர்ந்துவரும் நிதியைப் பங்கிட்டு முப்பது பேர்களது குடும்பங்களிடமும் ஒப்படைக்கும் வைபவம் விரைவில் குருநகரில் எளிமையான முறையில் நடாத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இரங்கல் செய்தி

"சண்முகசுந்தரம் அவர்கள் சிறந்த நூலாசிரியர். யாழ்ப்பாணக் கலைப் பாரம்பரியம் சார்ந்த பயனுள்ள ஆய்வு நூல்களை அவர் எழுதியுள்ளார். மரபுவழி இலக்கியத்தில் பற்றுடையவராகிய அவர், நவீன படைப்பிலக்கியத் துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். தமிழ்க் கதைஞர் வட்டத்தில் தலைவராகவும் காவலராகவும் பணிபுரிந்து அந்த அமைப்பின் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளார். உத்தியோக ஓய்வு பெற்றபின் எழுத்துத்துறையில் அதிகமாக ஈடுபடத் தொடங்கியிருந்த வேளையில் அவர் காலமானது தமிழ் இலக்கியத்துக்கு ஒரு இழப்பாகும்" என்று தகவம் அமைப்பு த. சண்முகசுந்தரம் அவர்களது மறைவுகுறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

## இடமாற்றம்

(புலோலி)

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை கட்டைவேலி உப- அலுவலகத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. எஸ். கார்த்திகேசு யாழ். அபிவிருத்திச் சபை புலோலி உப- அலுவலகத்திற்கும், புலோலி உப- அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. எம். எக்ஸ். சர்வானந்தன் யாழ். அபிவிருத்திச்சபை மானிப்பாய் (கிராம) உப- அலுவலகத்திற்கும், யாழ். அபிவிருத்திச்சபை அச்சுவேலி உப- அலுவலகத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. கே. குமரபதி யாழ். அபிவிருத்திச் சபை கட்டைவேலி உப- அலுவலகத்திற்கும் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் அறிவித்துள்ளார்.

## பிறந்தநாள் வாழ்த்து

❋ தாவடி வடக்கு, குகராஜா கலாநிதி தம்பதியின் மகள் ஜாமினி இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❋ எழுதுமட்டுவாள் வடக்கு, குலவரதராசா ரஞ்சினி தம்பதியின் புதல்வர்களான நிதர்சன், நிஷாந்தன் ஆகியோர் இன்று தமது முதலாவது, மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்கள்.

❋ நெடியகாடு கிழக்கு, ஸ்ரீஸ்கந்தராஜா கனகமலர் தம்பதியின் புதல்வர்களான சுதன், சுரேஷ் ஆகியோர் இன்று தமது மூன்றாவது, ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்கள்.

❋ முருங்கன், நடராஜா மகேஸ்வரி தம்பதியின் மகள் வானதி இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ நவாலி வடக்கு, முத்தையா பரமேஸ்வரி தம்பதியின் மகள் இந்துமதி இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❋ சித்தன்கேணி, யோகராஜா சந்திரவதனா தம்பதியின் மகள் சுதர்சினி இன்று தனது பதினொராவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.


## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## பிரயாண ஒழுங்குகள்

1. சவூதி HARBOUR CLEANERS
2. ஈராக் HOSPITAL CLEANERS
3. வீட்டுப்பணிப்பெண்கள் HOUSE MAIDS

யாழ். முகவரி: மதுரா வீடியோ சென்ரர்
இல, 96, 4ம் குறுக்குத் தெரு,
T.P. No: 23549 சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
Proprietor M. S. RANJITH

கொழும்பு:
**HORIZON ENTERPRISES**
No. 87, 2/1 2nd FLOOR,
KOLLUPITIYA LANE,
T.P. No. 574000 COLOMBO-3.

R/24625



## டிரூன்ஸ் யூரோ ட்ரவல்ஸ்

○ பிரான்ஸ்
○ ஜேர்மனி
○ கனடா

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

உடனடியாக தொடர்பு கொள்ளவும்!

**K. மகேந்திரராசா**

டிரூன்ஸ் யூரோ ரவல்ஸ்
6, நவீன சந்தை,
(மேல் மாடி)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23831

செட்டியார் மடம்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

B/1434



## சிவாச்சாரியார் தேவை

கொக்குவில் மாத்தனைக் கந்தசாமி கோயிலுக்கு நித்திய பூஜையும். கோயில் கிரியைகள் செய்வதற்கும் தகுதி உள்ள சிவாச்சாரியார் தேவை. இருப்பிட வசதியும் உண்டு. தகுதியுடையோர் நற்சான்றுகளுடன் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

சு. சிவனேசன்
முகாமையாளர்
மாத்தனைக் கந்தசாமி கோவில்,
சம்பியன் லேன்,
கொக்குவில்.

விபரங்கட்கு:
ஏ. கே. எஸ். நகைமாளிகை,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

R/24630



# TOEFL

வெளிநாட்டுக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் மேற்படிப்புகளைத் தொடர விரும்புவோருக்கும் அந்நாடுகளில் வேலை வாய்ப்புகளை எதிர்பார்ப்பவர்களுக்கும் TOEFL பரீட்சையில் திறமைச் சித்தி அவசியம்.

**Full Course Fees: Rs. 250/-**

**SPOKEN ENGLISH**

English in caught rather than taught, and the best way of learning English is to speak it.

இரண்டு மாதத் துரிதப் பயிற்சி நெறி.
ஆர்வமுள்ளோருக்கு அரிய சந்தர்ப்பம்.
வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

**Full Course Fees: Rs. 100/- only**

விரிவுரைகள்: பிரபல ஆங்கில விரிவுரையாளர் கந்தையா நவரேந்திரன்

Both Classes will be held during weekends

Commencement - 9-8-86

வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்

I.C.M.A., A.A.T., I.D.P.M., I.A.B., Computer Programming, Radio & T.V. Engineering, வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

# CANTABIA INSTITUTE

21, MAIN STREET,
JAFFNA.
T' Phone: 24201

B/1429

ஈழமுரசு



## க. பொ. த. (உயர்) பரீட்சை

# மனச்சாட்சிக்கு எதிராக செயற்படக் கூடாது

(புலோலி)

க. பொ. த. (உயர்) தரப் பரீட்சையில் மனச்சாட்சிக்கு விரோதமான எந்தவித நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டாமென்றும் பரீட்சை நேர்மையுடன் சிறப்பாக நடைபெற சகலரும் ஒத்துழைப்பு வழங்கி எமது எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வுக்கு வழிவகுக்கவேண்டும் எனவும் பருத்தித்துறை கல்வி வளர்ச்சிக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: எந்தவிதமான கஷ்டங்கள் ஏற்படினும் எமது கல்வி பாதிப்படைய இடமளிக்கக் கூடாது. பரீட்சைகள் எதுவித காரணங்கொண்டும் குழப்பக் கூடாது. பரீட்சையிலே மனச்சாட்சிக்கு விரோதமான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படக் கூடாது. பரீட்சை ஒழுங்காகவும், நேர்மையுடனும் நடைபெறும்போதுதான் மாணவர்கள் தாம் கற்ற கல்வியின் பயனைப்பெறமுடியும்.

இப் பரீட்சைகள் ஒழுங்காகவும், நேர்மையுடனும் நடைபெற வேண்டிய ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் கல்வி வளர்ச்சிக் கழகம் பரீட்சைப் பகுதியினருக்கு வழங்கும்.''

## ஆசிரியருக்கு

# எல்லாம் அறிந்தவன் என்ற இறுமாப்பு கூடவே கூடாது

(வல்வெட்டித்துறை)

'பாலர்களின் சிந்தனைகளைக் கொண்டே அவர்களின் கல்வி நடத்தப்படவேண்டும். அதுவே அவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் உகந்தது. அதை விடுத்து அவர்களின் அறிவுக்கு விளங்காத — எட்டாத விடயங்கள் அண்மைக் காலங்களில் பல ஸ்தாபனங்கள் மூலம் பாலர்களுக்குப் புகுத்தப்பட்டு வருகின்றன. இவைகள் மூலம், பெரியவர்களின் வித்துவத்தைக் காட்ட முடியுமே தவிர பாலர்களின் உளவளர்ச்சி முற்று முழுதாகப் பாழடிக்கப்படுகின்றது ஆகவே இந்த நிலை உடனடியாக' மாற்றப்படவேண்டும்.'

இவ்வாறு யாழ். சர்வோதயம் பாலர் பாடசாலை பணிமனையில் நடைபெற்ற கண்காட்சி பொருட்காட்சியினை ஆரம்பித்து வைக்கப்பட்ட பொழுது ஆசிரியர் திரு. எஸ். சுந்தரலிங்கம் (ஈழதீபன்) தனது உரையில் கூறினார்.

சர்வோதய இணைப்புச் செயலர் திரு. சி. யோகானந்தன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக் கண்காட்சியில் அவர் தொடர்ந்து பேசுகையில் ஆசிரியர் என்றால், எமக்கு எல்லாம் தெரியும் என்ற இறுமாப்புக் கொள்வதை விடுத்து அறிவு எங்கு எங்கு உண்டோ, குஞ்சுகளுக்கு இரைதேடும் பறவையைப் போல மற்றவர்களிடமும் இருந்து கிரகித்து பிள்ளைகளின் அறிவுப் பசிக்கு ஏற்றவாறு ஊட்டுவதே பிள்ளைகளின் கல்வி அறிவு வளர்ச்சிக்கு உகந்ததாகும்.

இன்றைய நிலையில் நாம் ஆடம்பரத் தொழிற் கல்வியை விட்டு சுலபமாகப் பெறக் கூடிய சூழல்களில் பெறக் கூடிய பொருட்களைக் கொண்டே ஆக்க முயற்சி மூலம் மாணவர்களுக்கு கல்வியூட்டப்படல் வேண்டும். இதுவே இன்று எம் நாட்டுக்கும், மக்களுக்கும் செய்யும் பேருதவியாகும்' என்றார்.

உடைந்த கண்ணாடித் துண்டுகள், பனை மூலம் பெறப்படும் பொருட்களைக் கொண்டு செய்யப்பட்டு, காட்சிக்கு வைக்கப்பட்ட பல காட்சிப் பொருட்கள் வியக்கத் தக்க வகையில் அமைந்திருந்தன.

வெளிக்களப் பிரதம ஆசிரியர் நன்றியுரை நிகழ்த்தினார்.

# கதிர்காமநாதன் ஏற்றுள்ள இந்துசமுத்திர முக்கிய ஆய்வு

(வேலணை நிருபர் கே. வி. கே. ஜெயச்சந்திரன்)

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அணுப்பரிசோதனைகள் செய்வதை தடுப்பதற்கும், மற்றும் கடல்வாழ் முலையூட்டிகளான டொல்பின்கள், தமிங்கிலம் போன்றவற்றை வேட்டையாடுவதை தடுப்பதற்கும் தமது சேவையை இந்துசமுத்திரப் பிரதேசத்திற்கு விஸ்தரிப்பதற்கும் அதற்கான தளமாக இலங்கையை தெரிவு செய்வதற்கான சாத்தியக்கூறுகள்பற்றி ஆராய்வதற்காகவும் ''கிறீன் பீஸ்'' என்னும் சர்வதேச சுற்றாடல் பாதுகாப்பு இயக்கம் முன்வந்துள்ளது.

இதற்காக வேலணையைச் சேர்ந்தவரான அமெரிக்க சவுத் வெஸ்ற் பல்கலைக்கழக விஞ்ஞான, கலாநிதிஆராய்ச்சியாளர் திரு. நகுலேசபிள்ளை கதிர்காமநாதன் ஜே. பி. யை மேற்படி கிறீன்பீஸ் சர்வதேச பணிப்பாளர் கலாநிதி மைக்கேல் போஸ்னி நியமனம் செய்துள்ளார். அத்துடன் இது சம்பந்தமான அறிக்கையொன்று சமர்ப்பிக்கும்படி இவரிடம் கேட்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கடல்வாழ் விலங்கினங்களைப் பாதுகாக்கும் சட்டங்களைப் பற்றியும், இச்சட்டங்கள் சர்வதேச சட்டங்களுடன் முரண்படுகின்றதா என்பது பற்றியும் கேட்கப்பட்டுள்ளது. இலங்கையில் பிறந்து வளர்ந்த இவர் மெலானி தேம்சன் நியூசிலாந்திலிருந்து (கிறீன்பீஸ்) சர்வதேச சுற்றாடல் இயக்கத்தின் இணைப்பதிகாரியாக கடமையாற்றுகின்றார். மேற்படி சாத்தியக்கூறுகள் பற்றி தற்போது விஞ்ஞான ஆராய்ச்சியாளர் திரு என். கதிர்காமநாதன் அவர்களால் ஆராய்ச்சி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. கிறீன்பீஸின் தளங்கள் அவுஸ்திரேலியா, கனடா, டென்மார்க், பிரான்ஸ், நெதர்லான்ட், நியூசிலாந்து, சுவீடன், ஐக்கிய இராச்சியம், யூ. எஸ். ஏ. மேற்கு ஜேர்மனி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றது.

இலங்கையில் இதன் தளம் அமைக்கப்படுமாயின் இலங்கை அணு வல்லரசுகளின் கோரப்பிடியிலிருந்து பாதுகாக்கப்படும் என்பது உறுதி. மேற்படி கிறீன்பீஸ் அமைப்பானது அணுப்பரிசோதனைகளை நடாத்துவதை தடை செய்வதும், சுற்றாடல்களைபாதுகாத்து மனிதனை காப்பாற்றுவதுமே அதன் கொள்கையாகும்.

## தங்குமண்டபம்

(வேலணை)

வேலணை அராலித்துறையில் மழை, வெய்யில் காலங்களில் பிரயாணிகள் தங்குவதற்கான மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம் செய்து வருகின்றார்.

இம்மண்டபம் அமைப்பதற்கான உதவிகளையும் ஆலோசனைகளையும், தந்துதவும்படி அவர் பொதுமக்களிடமும், பொது நிறுவனங்களிடமும், இளைஞர் அமைப்புக்களிடமும் கேட்டுள்ளார்.

# உபதபால் நிலையங்கள் பலவும் இழுத்து மூடவேண்டியநிலையில்

(சுன்னாகம்)

ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம், கந்தரோடை, இணுவில் ஆகிய கிராமங்களில் செயலாற்றிவரும் பத்து உபதபாலகங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு சுன்னாகம் தபாற் கந்தோர் இயங்கி வருகின்றது.

கடந்த சில நாட்களாக சுன்னாகம் தபாற்கந்தோரிலிருந்து உபதபாற்கந்தோருக்கு எந்தவொருவகையினதான முத்திரைதானும் அனுப்பப்படாத காரணத்தால் வழமையான கடமையைத் தானும் செய்ய முடியாத நிலையேற்பட்டுள்ளது–மக்களும் தமக்குத் தேவையான முத்திரைகளையும், வான் வழிக் கடிதங்களையும் கூடிய விலைக்கே தனியார் கடைகளில் பெற்றுவருகின்றனர்.

முத்திரை விற்றுப்பெற்ற பணத்தைக் கொண்டே அனாதைகளானவர்க்கான பணக் கொடுப்பனவையும் நிறைவேற்றிவந்த உபதபாலகங்கள் இப்போது அவ்வாறு செய்யமுடியாத நிலை தோன்றியுள்ள காரணத்தால் அவர்களும் பாதிப்புறுகின்றனர்.

மாத நடுப்பகுதியில் திருப்பி அனுப்பப்படவேண்டிய அனாதைக் கொடுப்பனவுப் படிவங்கள் பலருக்குப் பணம் வழங்கப்படாத காரணத்தால் மாதம் முடிந்துவிட்ட பின்பும் அனுப்ப முடியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது, சமூக நலன் விழையும் சில தபாலதிபர்கள் சிலரின் வீடு தேடிச் சென்று காசுக்கட்டளை மாற்றுவதற்கென வலிந்திழுத்து அதன் மூலம் அனாதைகளுக்கு உதவி வருகின்றனர்.

முற்றிலும் தன்கையில் கட்டுப்பாடுகளை வைத்திருக்கும் தபாற்கந்தோர் உபதபாலகங்கள்இயங்குவதற்கேற்ற மாற்று வழிகளைக் கையாளவேண்டும் என விருப்பந்தெரிவிக்கின்றது.

# இடர் எது நேரினும் தமிழ்ப் பற்று மறையாது

(குருநகர்)

''குடாநாட்டின் பல்வேறு பாடசாலைகளிலும் கல்விக் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இங்கு தமிழ் அன்னைக்கு விழா எடுப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். தமிழன் எவ்வித இடர்படினும் தனது தாய்க்கு விழா எடுப்பதனை நிறுத்த மாட்டான். யார்தான் எதிர்த்தாலும்; எந்த ரூபத்தில் எதிர்ப்புத் தோன்றினாலும் தமிழ் வாழ்க, அவர் தம் புகழ் வாழ்க என வாழ்த்தியே தீருவான்''.

குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய தமிழ் தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்புரை ஆற்றிய வட்டாரக் கல்வியதிகாரி திரு இ. சிவானந்தன் இவ்வாறு குறிப்பிட்டார். வைபவம் வித்தியாலய மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சி ஆரம்பத்தில் கல்லூரி மாணவர்கள் இருவர் ஜூன் மாதம் 1-ம் திகதி கோட்டை ஷெல் மூலம் கொல்லப்பட்டதற்கும், ஜூன் மாதம் 10,ம் திகதி அவர்களது ரத்த உருத்தினர்களான 30 மீனவர்கள் மண்டைதீவில் வைத்துக் கறுப்புச் சட்டைக்காரர்களால் கொலை செய்யப்பட்டதிற்குமாக இரு நிமிட நேரம் மௌன அஞ்சலி அனுட்டிக்கப்பட்டது.

தலைமையுரையில் அதிபர் திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ் நம்மையே அழிக்கும் போதைப் பொருட்களான கள்ளு, சாராயம், வடிசாராயம் உற்பத்தியாளர்களையும், பாவனையாளர்களையும் இனம் கண்டு நல்வழிப் படுத்த வேண்டும். தமிழ் சாதியினரிடையே புரையோடிக் கிடக்கும் புராதனக் கொள்கைகளில் ஒன்றான சீதனம் வாங்கும் பழக்கத்தை நிராகரிக்க வேண்டும். மாணவர்களது மனதில் மாற்றம் ஏற்படவேண்டும். புதுத்தெம்புடன் வீரம் மிக்க, தியாக உள்ளம் படைத்த புரட்சி வீரர்களாய் திகழவேண்டும்'' என்றார்.

விழா ஆரம்பத்தில் அருட் சகோதரியும், கல்லூரி ஆசிரியையுமான எம். பாஸ்கர் வரவேற்புரை நிகழ்த்தினார். போட்டிகளில் பரிசில் பெற்ற மாணவர்களுக்கு புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண. பிதா பீற்றர் துரைரட்ணம் பரிசுகள் வழங்கினார்.

தொடர்ந்து மாணவர்களின் நடன, நாடக, பாடல் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஆசிரியை திருமதி. பி. ஞானப்பிரகாசத்தின் நன்றி நவிலலுடன் விழா முடிவுற்றது.

# ''ஆரம்ப சுகாதார நிலைய செயற்பாடு சிறப்பானது''

(வல்வெட்டித்துறை)

''இன்று ஒவ்வொரு பகுதிகளிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டு இயங்கிவரும் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்கள் மக்களுக்குப் பெரும் பங்கினையாற்றி வருகின்றன. இந் நிலையங்களின் மூலம் பெறப்படும் அறிவுரைகள், செயற்பாடுகள் மூலம் மக்கள் சுகாதார முறைப்படி வாழ கற்றுக்கொள்ளக் கூடிய பெரும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமாக கிராமப்புற மக்கள் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள் மிகக் குறைவாகவே காணப்படும் இக் காலகட்டத்தில் கிராமிய மக்களுக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் கிராமிய மக்களுக்கு சுகாதார ஆலோசனைகளை வழங்குவதற்கும், அவர்களுக்கு வேண்டிய முதலுதவிச் சிகிச்சைகளை வழங்குவதற்கும், இப் பகுதிகளில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்கள் பெரிதும் பயனுள்ளவைகளாக அமைந்துவிட்டன''.

மேற்கண்டவாறு, உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சுகாதார தின கலை நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்த வல்வை, அரசினர் வைத்தியசாலை, வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி எஸ். பத்மலோஜினி தமது வரவேற்புரை நிகழ்த்துகையில் கூறினார்.

அவர் தொடர்ந்தும் தமது உரையில், ''மக்களுக்காக, மக்களின் நன்மைகருதி இயங்கிக் கொண்டிருக்கும் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களின் மூலம் மக்கள் தமது தேவைகளை, நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நிலையங்களில் கடமையாற்றும், தன்னலம் கருதா சேவையில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்களின் நல் அறிவுரைகளை, யோசனைகளைப் பெற்று அவற்றின்படி நடக்க முன்வரவேண்டும்'' என்றார்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலித்குமார் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களின் கடமைகள் என்ன? எவ்விதம் செயற்பட வேண்டும்? மக்களோடு நிலையங்களில் கடமைபுரியும் தொண்டர்கள் எவ்வகையில் நடந்து கொள்ளவேண்டும்? என்பன போன்ற செயற்பாட்டு விளக்கங்களை விரிவாக எடுத்துக் கூறினார்.

இக்கால சூழ்நிலைக்கமைய, மக்கள் மனதைக் கவரும் வகையில், வில்லிசை, வாய்ப்பாட்டு, கவிதை, நாடகங்கள் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

''கரையை உடைக்கும் புதிய அலைகள்'', ''எங்கள் அனுபவம்'' போன்ற நாடகங்கள் மக்கள் மனதைக் கவரும் வகையில் இருந்தன. ''மீண்டும் சொர்க்கம்'' வில்லிசை நிகழ்ச்சி கருத்து செறிந்ததாக இருந்தது.

பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன,

செயற்பாடுகள் நிறைந்த ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களுக்கான தெரிவில் இமையாணன் ஆ. சு. க. நிலையம் முதலாவது இடத்தையும், நவிண்டில் ஆ. சு. க. நிலையம் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டன.

# போராட்ட நிலையில் வாழ்கிறோம்

(கரவெட்டி)

இன்று நாம் ஓர் போராட்ட சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இச் சந்தர்ப்பத்தில் தமிழர்களாகிய எமது வாழ்க்கை நீரிற்குமிழி போல நிலையற்றதாக, நெருநலுள ளொருவன் இன்றில்லை என்ற வள்ளுவனின் கூற்றோடு இயைவாக அமைந்து விடுகின்றது. இச் சூழ்நிலையில் நாம் வாழ்கின்ற நேரத்திலாவது அனைவரும் ஐக்கியப்பட்டு வாழ்தல் அவசியமானது. எமது ஐக்கியமானது கலந்து கரையும் தன்மையின்றி, அணு நண்டை விட இறுக்கமாக இருத்தல் அவசியம். இத்தகைய ஐக்கியத்தையேற்படுத்துமிடமாக சனசமூக நிலையங்கள் போன்ற வெகுசன ஸ்தாபனங்கள் பேருதவி புரிகின்றன.

இவ்வாறு கரவெட்டி திருவள்ளுவர்சனசமூகஅங்குரார்ப்பணக் கூட்டத்திலே திரு. நா. பாஸ்கரன் உரை நிகழ்த்தினார். மேற்படி கூட்டத்திற்கு மன்றத் தலைவர் செல்வன் எஸ். இரவீந்திரன் தலைமை வகித்தார்.

மேற்படி கூட்டத்தில் செல்வன் இ. சிவகுமார், திரு. சு. சின்னத்தம்பி, திரு. வன்னியசிங்கம், திரு. தியாகராசா திரு. வ. திவ்வியராசா ஆகியோரும் கருத்து தெரிவித்தனர்.

### உதய சிந்தனை

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அது போல உலகம் கடவுளை அடிப் படையாகக் கொண்டிருக்கின்றது. —திருக்குறள்.

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

2-8-86 சனிக்கிழமை (அக்ஷய) ஆடி 17

# தமிழ் மாணவரும் உயர் பரீட்சைகளும்

ஆண்டாண்டு தோறும் நடைபெறும் ஜி சி. ஈ. உயர்தரப் பரீட்சை வழமைபோல நேற்று ஆரம்பமாகியுள்ளது.

மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் பரீட்சைக்கான வினாத் தாள், விடைத்தாள் ஆகியவைகள் கொழும்பிலிருந்து விமான மூலம் எடுத்து வரப்பட்டன என்பதையும், பலாலியிலிருந்து யாழ்நகருக்கு மேலும் பல கெடுபிடிகளின் ஊடாகவே இவை கொண்டு வரப்பட்டன என்பதையும் நாமறிவோம்.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளையும் செய்து, எந்த விதமான வித்தியாசமுமின்றி யாழ்ப்பாண மாவட்டத்திலும் பரீட்சை நடைபெற ஒழுங்குகளைச் செய்த யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கும், அவருடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் நன்றி சொல்ல வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

இங்கு அறுபத்து மூன்று பரீட்சை நிலையங்களில், ஏறத்தாழ எண்ணாயிரம் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

மாணவர்கள் தமது பன்னிரண்டு வருடகால பாடசாலைக் கல்வியின் பலாபலனை அறுவடை செய்வதற்கான பரீட்சை இது.

பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை என்றே இதனைப் பொதுவாகக் கூறினாலும், மாணவர்களின் எதிர்காலத்தை நிச்சயிக்கும் இறுதிப் பரீட்சை என்று கூறுவதே இன்றைய காலகட்டத்தில் பொருத்தமானது எனலாம்.

பல்கலைக்கழகம் உற்பத்தி செய்யும் டாக்டர்கள், பொறியியலாளர்கள், பட்டதாரிகளை மட்டுமன்றி, கணக்காளர்கள், சட்டத்தரணிகள் உட்பட இன்னோரன்ன பல்வேறு துறைக்கான எதிர்கால நிபுணர்களும் இப்பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்தே தயார் செய்யப்படுகின்றனர்.

இந்த வகையில் ஜி. சி. ஈ. உயர்தரப்பரீட்சை மிக மிக முக்கியமான ஒரு பரீட்சையாகவே கொள்ளப்படுகின்றது.

இப்பரீட்சையின் முடிவுகளில் தரப்படுத்தல் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதாலும், தமிழ் மாணவர், சிங்கள மாணவர் என்று இன ரீதியான புள்ளிகள் வரையறுக்கப்பட்டதாலுமே தமிழ் மாணவர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டு, அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு, விடுதலைப் போராட்ட இயக்கங்கள் தமிழ்ப் பகுதிகளில் ஆரம்பமாகின என்பதை மீண்டும் நினைவு படுத்த வேண்டியதில்லை.

ஆனால் இதனை மறந்து, கடந்த வருடங்களில் இங்கு இடம்பெற்ற பொதுப் பரீட்சைகள், போட்டிப்பரீட்சைகள் சில தீய சக்திகளால் குழப்பப்பட்டதையும், மாணவர்கள் வேதனையுடன் வீடு திரும்ப நேரிட்டமையையும், பல மாதங்களின் பின்னர் மீண்டும் அவர்கள் அதே பரீட்சைக்குத் தோற்றியமையையும் இங்கு நாம் நினைவுபடுத்துவது நல்லது.

போராட்டக் களத்தில் மாணவர் கல்வி, சமூக பொருளாதார வளர்ச்சி, இன ஒற்றுமை, மனோ வளர்ச்சி ஆகியன எந்த வகையிலும் பாதிப்படையக் கூடாது என்ற உணர்வு இங்கு இப்போது உருவாகியுள்ளமை அனைவருக்கும் மகிழ்வைத் தருகின்றது.

இந்த அடிப்படையில் நேற்று ஆரம்பமான ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையைச் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடத்த அனைத்துச் சக்திகளும் ஒன்றுபட்டு முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

பாடசாலைகள் தோறும் பெற்றார், பழைய மாணவர், நலன் விரும்பிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைகளைக் குழப்புபவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எச்சரிக்கை செய்துள்ளது.

இந்த வகையில் பார்க்கும் போது நேற்று ஆரம்பமான ஜி. சி. ஈ. உயர் தரப்பரீட்சை எந்த இடையூறுமின்றி சிறப்பாக நடைபெறுமென்று நம்பலாம்.

இதே போன்று எதிர்காலங்களிலும் சகல பரீட்சைகளும் தடங்கல் எதுவுமின்றி நடைபெற அனைவரும் தங்கள் ஆதரவை வழங்கவேண்டியது அவசியமாகும்.

# வடபகுதியில் சிவில் நிர்வாகம் உருக்குலைந்ததுஎன்பதுதவறு; முற்றாக அற்றுப்போயுள்ளது!

மீனவர் குடும்பங்கள் தமது அவோ கதியை ஊருலகம் அரசு அறியவைத்தற்கு, இவ்வலயப் பிரகடனத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்த ஆரம்பித்துள்ளன. அண்மையில் நடத்தப்பட்ட அத்தகைய ஓர் ஆர்ப்பாட்டத்தில் சுமார் பத்தாயிரம் முதல் பதினையாயிரம் மீனவர், ஆண்களும் பெண்களும், குழந்தைகுட்டிகளுமாக பங்குபற்றினர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் பொருளாதாரமும் குடிசன வாழ்க்கையும் மிகப் பெருமளவில் சீர்குலைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றின்போது இலங்கையின் ஜனாதிபதி ஜெயவர்த்தன கூட இதனை ஒப்புக் கொண்டு உள்ளார். வட இலங்கையில் அரசின் 'சிவில்' நிருவாகம் உருக்குலைந்து போய்விட்டது என்பதிலும் பார்க்க, ஏறத்தாழ முற்றாக அற்றுப்போய்விட்டது என்றே கூறிவிடலாம். இராணுவம் தனது பாசறைகளுக்கு உள்ளேயே பெரும்பாலும் முடங்கிக்கிடக்கிறது. நிலக்கண்ணி வெடிகளின் ஆபத்தை முன்னிட்டு, இராணுவத்தின் வீதி 'ரோந்து'கள் (சுற்றுக்காவல்கள்) கணிசமான அளவு குறைக்கப்பட்டு வருகின்றன. அதேசமயம், வானத்தினின்றும் நடைபெறும் கண்காணிப்பு, விமானத் தாக்குதல் நடவடிக்கைகள் முதலாயின அதிகரித்துச் செல்கின்றன.

இளவயதினர் தொழில் தேடிச் செல்வது அரிதாகிவருகிறது. சிலர் குடிசைக் கைத்தொழில் எதையாவது ஆரம்பிப்பர். அனேகர் தொடர்ந்தும் குடாநாட்டைத் துறந்து 'வெளியே' செல்கின்றனர். இப்படியாக இந்தியா செல்லும் பெருந்தொகையான அகதிகள் இன்னமும் அவ்வண்ணம் போய்க் கொண்டே இருக்கின்றனர். இல்லையேல், வேறு நாடுகளுக்கு அவர்கள் செல்வதும் உண்டு.

இனி, விடுதலைப் போராளிகள் இயக்கம் ஏதாவது ஒன்றில் சேரவேண்டிய நிர்ப்பந்தமும் சிலருக்கு ஏற்படுகிறது. அதில் சேர்ந்துகொண்டதும் இயக்கங்களினால் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு கைத்தொழில்களிலோ, வியாபார முயற்சிகளிலோ ஈடுபட்டு, அவர்கள் தமது சீவனோபாயத்திற்கு ஓரளவு வழிதேடிக்கொள்ளலாம் போராளிகள் நடத்தும் உண்டிச் சாலைகளும் உள்ளன. தனியார்துறை வர்த்தகர் ஒவ்வொருவரிடமும் இருந்து போராளிகள் நூற்றுக்கு மூன்று சதவீத விற்பனைப்பங்கு தொகை ஒன்றையும் அறவிட்டு வருகின்றனர்.

உள்ளூராட்சி விற்பனைச் சாலைக் குத்தகைகளையும் போராளிகள் குறைந்த வாடகை விகிதத்திற்குப் பெறும் வாய்ப்பு உண்டு. துப்பாக்கி ஏந்தும் ஆட்களுடன் இப்படிப் போட்டியிட யார் முன்வருவார்கள்? மிகச் சிலரே. உள்ளூர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களும் கொந்தராத்துகளும் போராளிகளுக்குச் சுலபமாகக் கிடைக்கின்றன. விடுதலை இயக்கங்களின் நிதி ஊற்றுக்கண்கள் இவ்வண்ணமாகத்தான் கிரமமாகப் பணம் சுரக்கின்றன.

வட இலங்கையிலுள்ள நிலைமையில் புதிய சுவாரஸ்யமான ஒரு திருப்பம் உருவாகிவரக் காணலாம். அதுதான் புதிய, பரந்த அடிப்படையிலான ஓர் ஆர்ப்பாட்ட இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியினின்றும் வேறுபட்ட இந்த இயக்கமானது. பலதரப்பட்ட தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்களை விடக்கூட வித்தியாசமானது.

இந்தப் பிரமாண்டமான ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றியோர் சுமார் எத்தனை பேர்? ஆகக் குறைந்தபட்சம் இருபது முதல் முப்பதினாயிரம் மக்களாவது அங்கு இருந்திருப்பர் எனச் சில மதிப்பீடுகள் கூறின.

('கோஓர்டினேற்றிங் கமிட்டி ஒஃவ் தமிழ் பீப்பிள் போர் ஸ்ற்ரகிள் எகென்ஸ்ற் ஒப்றெஷன்') அடக்கியொடுக்குமுறை

**நேற்று வெளியான கட்டுரையின் இறுதிப் பகுதி இது.**

புதிதாக வெளித்தோன்றியுள்ள இவ்வியக்கம் வடக்கிலுள்ள தொழிற சங்கங்களை அடிப்படையாகக் கொண்டது. இவற்றிற் பல, அகில இலங்கைச் சம்மேளனங்களின் கிளைகளாகும். இச்சங்கங்கள் தற்போது தொழிற் சங்கங்களின் இணைக் கமிட்டி ('ஜொயின்ற் கமிட்டி ஆப் ற்ரேட் யூனியன்ஸ்') ஒன்றை உருவமைத்து உள்ளன. வலுமிக்க அன்னையர் முன்னணி ('மதேர்ஸ் புறன்ற'), மாணவ தாபனங்கள், சில கூட்டுறவுச் சங்கங்கள், பொது மக்கள் அமைப்புகள் முதலாம் பிற குடியியல நிறுவனங்களோடு சேர்ந்து இககமிட்டியானது வன்மையான, வித்தியாசமான ஓர் ஆர்ப்பாட்டத்தை முடுக்கிவிட்டிருக்கிறது.

இப்புதிய ஆர்ப்பாட்டப் போக்கில் அவதானிக்கப்படத்தக்கது யாதெனில, இது சிங்களவருக்கு எதிரானதல்ல. அத்துடன், தனிவேறான அரசுகளாக இலங்கையின் பிரிவினைக்கும் இபபுதிய ஆர்ப்பாட்டம் எதிரானதுமல்ல.

1986, பெப்ரவரி இருபத்தொன்பதாம் திகதியன்று இந்த இயக்கம் நடத்திய ஆர்ப்பாட்டம், அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்களில் ஒன்று ஆகும். ஆறு சுலோகங்களைத் தாரக மந்திரமாக இவ்வார்ப்பாட்டம் கொண்டு விளங்கிற்று. ஆயுதம் தாங்கிய நடவடிக்கைகள், வட பகுதியில் ஆயுதப் படைப்பட்டாளங்கள் தங்கியிருத்தல், ஆகியவற்றுககு முற்றுப்புள்ளி வைக்கப் படுதல் வேண்டும்; அரசியல் தீர்வுநாடிய முயற்சி மீண்டும் தொடர்தல் வேண்டும். சுலோலகங்களின் சாராம்சம் இதுவே.

க்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் மக்களின் ஒருங்கிணைவுக் கமிட்டி எனும் பெயர் கொண்ட ஒரு நிறுவனமாக இப்புதிய போக்குகள் ஒன்றுதிரண்டு உள்ளன. 1986, ஏப்ரல் மாதத்தில் ஒரு மாநாடு கூட்டும் திட்டம் அந்நிறுவனத்திடம் உண்டு. இலங்கையில் தற்போதைய மனித இனப் பிரச்சினை தொடர்பான நிலைமையோ நெருக்கடியானதும் அபாயகரமானதும் ஆகும்.

## கி. அ. சங்கம்

(வேலணை)

நாரந்தனை அம்பலம்புலம் என்னும் இடத்தில் புதிதாக கிராம அபிருத்திச் சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதன் நிர்வாகிகளாகப் பினவருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. செபஸ்தி பீற்றர். உபதலைவர் திரு. இ அலபோன்ஸ், செயலாளர் திரு. ஆசீர்வாதம் மரியசீலன் உபசெயலாளர் திரு. இ. விமலதாஸ், பொருளாளர் திரு. பா. டெலாஸ், ஆறு பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் அமைக்கப்பட்டது.

## பேச்சுப்போட்டி முடிவுகள்

(புலோலி)

வடமராட்சியில் அகில இலங்கை தேசிய சுகாதார வார விழாவையடுத்து பாடசாலை மாணவர் மாணவிகளுக்கிடையே 'வயிற்றோட்டம்,' 'சின்னமுத்து' பற்றிய பேச்சுப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலிதகுமார் இப்போட்டிகளுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். போட்டியில் பரிசில்களைப் பெற்றுக் கொண்டோர் விபரம் பின் வருமாறு.

க. பொ. த (உயர்) தர மாணவ, மாணவிகளுக்கிடையே நடைபெற்ற "வயிற்றோட்டம்" பேச்சுப் போட்டியில் 1ம் இடம் செல்வி. ஞானகி தம்பையா (வட இந்துமகளிர் கல்லூரி) 2ம் இடம் செல்வி சந்திரவதனி பத்மநாதன் (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கலலூரி) 3ம் இடம் செல்வி சத்திய ரேகா சிவப்பிரகாசம் (வட இந்து மகளிர் கல்லூரி)

க.பொ.த. (சாதா) தரமாணவ, மாணவிகளுக்கிடையே நடைபெற்ற 'சின்னமுத்து' பேச்சுப் போட்டியில் 1ம் இடம் செல்வன் எஸ். சசிதானந் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி) 2ம் இடம் செல்வி பி. மதுவதனா (புலோலி மெதடிஸ் மிஷன் தமிழகலவன் பாடசாலை) 3ம் இடம் செல்வி கே. ரூபலதா (வட இந்து மகளிர் கலலூரி.)

இவர்களுக்கான பரிசில்கள் நெலலியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற தேசிய சுகாதார வார விழாவின் போது பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. வ. இராமசசந்திரனால் வழங்கப்பட்டது.

ஈழமுரசு



## நிர்வாகிகள்

(உடுவில்)

மானிப்பாய் வடக்கு உதய சூரியன் சனசமூக நிலைய நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்: போஷகர் திரு. வே. இரத்தினசிங்கம், தலைவர் திரு. சு. தர்மசீலன் உபதலைவர் திரு. யோ. லேமன், செயலாளர் திரு. அ. தர்மலிங்கம், உப செயலாளர் திரு சிறே. ஜெயம், பொருளாளர் திரு பெ. அருந்தவநாதன், உப பொருளாளர் திரு. இ. சடாட்சரம், கணக்குப் பரிசோதகர் திரு. மகாவோ. மேலும் நிர்வாக அங்கத்தவர்களாக பதினைந்து பேர் தெரிவாகியுள்ளனர்.

o o o

(சுன்னாகம்)

அண்மையில் நடைபெற்ற மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய செல்வா சன சமூக நிலைய பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருடஉத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்கள் திரு. சி. இராமநாதன், திரு இ இராசதுரை திரு. அ. சதாசிவம், தலைவர் திரு. க. நாகலிங்கம், உபதலைவர் திரு. இ. சிவானந்தலிங்கம், செயலாளர் திரு. இ. அருணாசலம், உபசெயலாளர் திரு. சி. செல்லக்கொடி, பொருளாளர் திரு. மு. இரத்தினவடிவேல். ஆறுபேர்கொண்ட நிர்வாகசபையும்தெரியப்பட்டது.

o o o

ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் சமீபத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்:-

தலைவர் இ. பாலசுந்தரம், உப தலைவர் ச சுந்தரலிங்கம், செயலாளர் வீ.ஜெயரத்தினம், உப செயலாளர் க. மகாலிங்கம், தனாதிகாரி பொ. பாஸ்கரன். நிலைய அங்கத்தவர்களாக செ. கந்தசாமி, க.மகேந்திரன், பொ. கணேசரத்தினம், ப. சாந்தகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

o o o

(புலோலி)

முகமாலை சமாதான சபையின் தலைவராக மீண்டும் ஏகமனதாக திரு. கே. செல்வராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப தலைவராக திரு. க. சிதம்பரநாதனும், செயலாளராக திரு. த ஞானப்பிரகாசமும் உப செயலாளராக திரு. அ. பிறிஸ்கப்பும், நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்களான இ. பரமு, செ. சந்திரகுமார், த. கணபதிப்பிள்ளை, நா. செல்வராசா இ. பால்ராஜ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

o o o

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கத்தின் 14வது வருடாந்த பொதுக் கூட்டம் தலைவர் திரு நா. கனகசபையின் தலைமையில் நடைபெற்றது. பின்வரும் புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவாகினர்:

தலைவர்: திரு. வை. செந்திநாதன், பொதுச்செயலாளர்: திரு. செ குமாரசிங்கம், பொருளாளர்: திரு. ச. நல்லையா, உப தலைவர்: திரு. பா. பசுபதி, உப செயலாளர்: திரு. மா. இராசேந்திரம், உப பொருளாளர்: திரு க தங்கராசா, கல்விக் குழு தலைவர்: திரு. அ. நடராசா, கலைக் குழு தலைவர்: திரு. ஆ. இராசையா, விளையாட்டுக் குழு தலைவர்: திரு. த பஞ்சநாதன். கணக்காய்வாளர்: திரு. அ. விஜயநாதன். எட்டு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகினர்.

(வேலணை)

வேலணை கிழக்கு மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்க கூட்டம் மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட நிருவாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் திரு. சோ. வடிவேல் (அதிபர்) செயலாளர் திரு. ஆ. கருணாகரன். பொருளாளர் திரு. பி. சிவசுந்தரம் (ஆசிரியர்). ஆறு பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

o o o

(சுண்டுக்குளி)

கொழும்புத்துறை கிராம சேவகர் பிரிவு மக்கள் அவை சுகாதாரக் குழுவின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு பிலிப்றேச், உபதலைவர் டாக்டர் எஸ். சண்முகரத்தினம், செயலாளர்- திரு. சி. பேரானந்தம், உபசெயலாளர்- திரு ச. செல்வராசா, பொருளாளர்- திரு. செ. கந்தசாமி, உப பொருளாளர் திரு. சி. கந்தசாமி. செயற்குழுஉறுப்பினர்கள் எண்மர் தெரிவு செய்யப்பட்டனர்.

o o o

(சுன்னாகம்)

கருகம்பனை கொப்பிளாவடை மயானத்தைப் புனரமைப்புச்செய்வதற்கும், அதனை நந்நிலையில் பரிபாலித்து வருவதற்குமாகவென பின்வருவோரைக் கொண்ட பரிபாலனச் சபையொன்று தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர் திரு ஆ. சண்முகரத்தினம், உபதலைவர் திரு. க. சிதம்பரப்பிள்ளை, செயலாளர் திரு நா. போஜன், உபசெயலாளர் திரு. வி. சண்முகநாதன் பொருளாளர் திரு. க. திருநாவுக்கரசு. பதினொரு பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

o o o

(புலோலி)

பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவராக திரு எம். யோன்பொஸ்கோ தெரிவு செய்யப்பட்டுள்ளார் உப- தலைவராக திரு. எஸ். சபாபதிப்பிள்ளையும், செயலாளராக திரு. சூ. மரியாம்பிள்ளையும் இயக்குநர் சபை உறுப்பினர்களாக திருவாளர்களான எம். ஜெறாட் தர்மராஜா ஏ. அருளானந்தம், ஜே. அம்புறோஸ் ஆகியோரும் தெரிவாகினர்.

o o o

யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் பல்கலைக்கழககைலாசபதி கலையரங்கில் சங்கத் தலைவர் திரு. ஆ. குணரத்தினம் தலைமையில் நடந்தேறியது இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. ஆ. குணரத்தினம் உபதலைவர்: திரு. க குமாரதாசன் இணைச்செயலாளர்: திரு. பொ. கந்தசாமி திரு. ப. டே. சற்குணராஜா பொருளாளர்: திரு. யோ ஜெயக்குமார் உபபொருளாளர்: திரு. சி. வ. சிவகுமாரன் பொதுநல உத்தியோகத்தர்: திரு க. இரத்தினசபாபதி பத்திராதிபர்: திரு. நா. கணேசலிங்கம் நிர்வாகப்பிரிவு பிரதிநிதி: திருமதி கி. நி. பாலச்சந்திரன் பராமரிப்புப் பிரிவு பிரதிநிதி: திரு. கு. சுரேந்திரன் நூலகப்பிரிவுப்பிரதிநிதி: திரு. செ பத்மநாதன் நலச்சேவைகள் பிரதிநிதி: திரு. ஐ. கோ. சந்திரசேகரம் பாதுகாப்புப்பிரிவு பிரதிநிதி: திரு. ம. புத்திரசிகாமணிகலைப்பீடப்பிரதிநிதி: திரு. வி. ரவிராஜ் விஞ்ஞான பீடப்பிரதிநிதி: திரு க. கருணானந்தராஜா மருத்துவபீடப் பிரதிநிதி: திரு. சு. பாலச்சந்திரன் வைத்தியசாலைப்பிரதிநிதி: திரு. மா. ஜெகராசா

பாரதம் கவலை தெரிவிப்பு: அமெரிக்க, ரஷ்ய

# படைக்குறைப்பு பேச்சு: முன்னேற்றம் இல்லையே

(புதுடில்லி)

**"சோவியத் யூனியனும், அமெரிக்காவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவரத்தான் செய்கின்றன. ஆனால் படைக்குறைப்புப் பற்றித்தான் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை" என்று பாரதம் கவலை வெளியிட்டுள்ளது.**

பாரதத்தின் சார்பில் இவ்வாறு துணை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

"உலக சமாதானத்தை எட்டுவதற்குத் தங்களது முயற்சிகளைத் தீவிரப்படுத்துமாறு அவர் மண்டல சார்பற்ற நாடுகளைக் கேட்டுக்கொண்டார்.

"சர்வதேச அமைதி, நலச்செழிப்பு மற்றும் ஒத்துழைப்பு மூலமான உலக முறைமை ஒன்றை எட்டுவதற்கான முயற்சிகளைத் தொடர வேண்டும் என அவர் வற்புறுத்தினார்.

'மண்டல சார்பின்மை முன்நோக்கும் பின்நோக்கும்' என்ற இக் கருத்தரங்கில் 20 நாடுகளைச் சேர்ந்த 200 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

'போர் மற்றும் பட்டினியினின்றும் விடுபட்ட அமைதியான, பாதுகாப்பான எதிர்காலம் ஒன்றைக் காணத் துடிக்கும் உலகின் கோடானுகோடி மக்களின் அபிலாஷைகளையும் நம்பிக்கை உணர்வையும் மண்டல சார்பின்மை இயக்கம் பிரதிபலிக்கிறது' என்றார் அவர்.

"மத்திய அமெரிக்காவிலும் மேற்காசியாவிலும் பூசல்களும், சண்டைகளும் நீடிக்கின்றன. ஆபிரிக்காவில் இனவெறி தலைவிரித்தாடுகிறது" என்றும் குறிப்பிட்டார்.

## 'வீட்டோ' மூலம் அமெ. நிராகரிப்பு

(வாஷிங்டன்)

நிக்கராகுவா கிளர்ச்சியாளர்களுக்கு உதவி வழங்குவதென்ற அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்க்கும் உலக நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தக் கோரும் மண்டல சார்பற்ற நாடுகளின் கோரிக்கையை அமெரிக்கா தனது 'வீட்டோ' அதிகாரம் மூலம் நிராகரித்துள்ளது.

## ராஜ குடும்ப தம்பதிகளின் பரமரகசிய தேனிலவு

(லண்டன்)

அத்திலாண்டிக் சமுத்திரத்தில் பிரிட்டனிலிருந்து 1200 மைல்களுக்கு அப்பால் உள்ள அஸோரேஸ் தீவில் பிரிட்டிஷ் ராஜ குடும்பத் தம்பதிகள் தமது தேனிலவைக் களிப்புடன் கழிக்கச் சென்ற சமயம் நிகழ்ந்த நிகழ்வு குறித்து சுவாரஸ்யமான தகவல்கள் வெளியாகியுள்ளன. சென்ற புதன்கிழமை இளவரசர் அன்ரூவும் மனைவி சரா பெகியுசனும் கல்யாணம் செய்து கொண்டிருந்தனர். பரம ரகசியமாக வைக்கப்பட்டிருந்த இவர்களது தேனிலவு கழிந்த இடம் ஒன்பது தீவுகளைக் கொண்டதாகும். இவர்கள் இருந்த தீவு பொன்டா டெல்காடா என்பதாகும். இது ஒரு எரிமலைத் தீவானாலும் பச்சைப் பசேலென்ற ரம்ய சூழல் கொண்டமைந்தது. பிரிட்டிஷ் ராஜ குடும்பத்தின் உல்லாசப் பயணப் படகு 'பிரிட்டானியா' விலும் அவர்கள் சஞ்சரித்த தீவுகளிலும் இவர்களது அந்தரங்கத்தையும், பாதுகாப்பையும் கவனித்துக் கொள்வதற்கென போதியளவு தொலைவில் இரண்டு போர்த்துக்கேய 'கோவெற்' கடுகதி கப்பல்கள் கடமையிலீடுபட்டிருந்தன.

## 'விவசாயத்தில் நம் சிரத்தை அதிகரிக்க வேண்டும்'

(புலோலி)

"எமது பகுதி பொருளாதாரம் விவசாயத்திலேயே தங்கியிருப்பதனால் விவசாயத்துறை அபிவிருத்தியில் நாம் கூடிய கவனமெடுக்க வேண்டும். விவசாயத்துறையில்உள்ள அறிஞர்களினதும் விவசாய அனுபவஸ்தர்களினதும் திறமைகள் சேவைகளை ஒருங்கிணைத்து விவசாய அபிவிருத்தி மேம்பாட்டை மேற்கொள்ளவேண்டும்"

இவ்வாறு வடமராட்சி விவசாய அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய ஓய்வுபெற்ற இறப்பர் ஆராய்ச்சிக் கழகத் தலைவர் கலாநிதி கே. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார். பருத்தித்துறை தம்பசிட்டி பாடசாலை மண்டபத்தில் இக்கூட்டம் இடம்பெற்றது கூட்டத்தில் இளைப்பாறிய விவசாயப் பணிப்பாளர் திரு. கே. மாணிக்கவாசகர், விவசாய ஆராய்ச்சி அதிகாரி திரு. வீ துருவசங்கரி உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

இங்கு பயிர்ச்சுழற்சி முறையும் பாரம்பரிய முறைகள் ஆய்வுக்குழு, விவசாயப் பொருட்கள் உற்பத்தி, சந்தைப்படுத்தல், ஆய்வுக்குழு, விவசாயப் பயிற்சி வகுப்புகள் மலையியல், தேனீ வளர்ப்பு, ஆய்வுக்குழு, மண்வளம் பேணல் ஆய்வுக்குழு, விவசாய உள்ளீடுகள் தேவைகள் ஆய்வுக்குழு, விவசாய இயந்திர பாவனை, பராமரிப்புக்குழு, பீற்றூட், திராட்சைகளிலிருந்து மதுபானம் பழரசம் தயாரித்தல் ஆய்வுக்குழு என ஏழு ஆய்வுக் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன.

## விசேட கூட்டம்

(சங்கானை)

வட்டுக்கோட்டை - கிழக்கு தாவளை கிராம அபிவிருத்திச் சங்க விசேடப் பொதுக் கூட்டம் வலி-மேற்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்தின் வேண்டுகோளின்படி உப- தலைவர் செல்வி கலைமகள் சிவசுப்பிரமணியம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சட்டத்தரணி திரு. ச. வ. சோமசுந்தரம் தலைவராகவும், கெல்விப்பளை அரசினர் வைத்தியசாலை பிரதம விகிதர் திரு. நா. சிவசுப்பிரமணியம்பொதுச் செயலாளராகவும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

## கிரிக்கெட் போட்டி

(உடுவில்)

உடுவில் கற்பக்குளை கலைமதி விளையாட்டுக் கழகத்திற்கும், ஏழாலை பாரதி விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கலைமதி வி. கழகம் 46 ஓட்டங்களையும் பாரதி 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டன. திரு. என். காசிநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

## 'சேவை நோக்கம் வேண்டும்'

(காரைநகர்)

"நாம் எந்த அளவிற்கு எமது தேசத்தின் விடுதலையை நேசிக்கிறோமோ அந்தளவிற்கு எமது மக்களின் போக்குவரத்து வசதிகளை சேவை நோக்கத்துடன் செயற்படுத்த வேண்டும்."

இவ்வாறு காரைநகர் தனியார் சிறு பேருந்துச் சங்கக் காரியாலயத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய மேற்படி சங்கத்தின் போஷகர் திரு. த. ஜெயக் மார் குறிப்பிட்டார்.

சிறு பேருந்துச் சங்கத் தலைவர் திரு. க. குலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "இக்கட்டான இக்காலகட்டத்தில் எமது மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். இந்நிலையில் மக்களை மேலும் கஷ்டங்களுக்கு உட்படுத்தாமல் தனியார் சிறு பேருந்து உரிமையாளர்கள் அனைவரும் மக்களுக்குச் சிறந்த போக்குவரத்து வசதிகளை அளிக்க முன்வர வேண்டும்" என்றார்.

பொருளாளர் திரு. சு. தம்பிராசா வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. சு. இராசலிங்கம், திரு. ந. சிவனையா, திரு. ந. கணேசமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர். செயலாளர் திரு. ஆ. க. நடராசா நன்றி நவின்றார்.

ஈழமுரசு

### யாழ். கோட்டை தாக்குதலில்

## காயமுற்ற கேர்ணலுக்கு இங்கிலாந்தில் சிகிச்சை

கடந்த திங்கட்கிழமை யாழ். கோட்டைமீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது படுகாயமடைந்த கேர்ணல் ஹப்பு ஆராய்ச்சி மேலதிக சிகிச்சைக்காக இங்கிலாந்துக்குக் கொண்டு செல்லப்படவுள்ளார். கப்டன் ஜெயவர்த்தன தொடர்ந்தும் கோட்டே ஜயவர்த்தனபுர வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். இவ்விருவரும் சுகமடைந்ததும் மீண்டும் யாழ்ப்பாணத்தில் கடமை புரிய விருப்பம் தெரிவித்ததாக கொழும்பில் நடந்த பாதுகாப்புக்கவுன்ஸில் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### பொலிஸ், ராணுவ சாட்சியங்கள் பதியப்பட்டபின்

# மூதூர் தமிழர் மரணங்கள் கொலை என்று தீர்ப்பு!

(திருகோணமலை)

கடந்த மாதம் 10ம் திகதி மூதூரிலுள்ள நான்கு தமிழ்க் கிராமங்களில் ஆயுதப்படையினர் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின்போது பலியானவர்களின் மரணவிசாரணையில் பொலிஸ் தரப்பிலும், ராணுவத் தரப்பிலும் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் முரண்பாடுகள் காணப்பட்டுள்ளன. இறந்தவர்களின் உறவினர்கள் நாற்பத்தொன்பது பேரும் இங்கு சாட்சியமளித்தனர்.

இந்த மரணவிசாரணை நேற்று முன்தினம் மூதூர் நீதவான் திரு. க. கதிரவேற்பிள்ளை முன்னிலையில் நடைபெற்றபோது சப் இன்ஸ்பெக்டர் திரு ஜி விஜயரட்ண சாட்சியமளிக்கையில், "சம்பவ தினம் ராணுவத்துடன் இருபத்திரண்டு பொலிஸார் எனது தலைமையில் கூட்டு ரோந்துக்காக சென்றோம். ஆனால் வழியில் தீவிரவாதிகள் எம்மீது சுடவில்லை. அதனால் பொலிஸாரும் திருப்பிச்சுடவேண்டிய நிலை ஏற்படவில்லை. எனினும் சில வெடிச்சத்தங்கள் பரவலாக கேட்டன" என்றார்.

ராணுவ தரப்பில் மேஜர் சுமணசேன சாட்சியமளிக்கையில் "அன்றைய தினம் நூற்றுஎண்பத்தைந்து படைவீரர்கள் தேடுதலுக்காக சென்றபோது தீவிரவாதிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். நாமும் திருப்பிச் சுட்டோம். வழியில் பதினேழு சடலங்கள் காணப்பட்டன. அவற்றை கட்டைபறிச்சான் முகாமுக்கு கொண்டு சென்று மறுநாள் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தோம்" என்றார்.

பொதுமக்கள் நாற்பத்தொன்பது பேரும் சம்பவங்களை விபரமாக கூறி சாட்சியமளித்தனர்.

இச்சம்பவத்தின்போது பதினெட்டுப்பேர் அகதிமுகாமில் இருந்து இழுத்துவரப்பட்டு சுடப்பட்டதாகவும், இருபத்தைந்துபேர் வீடுகளுக்குள் சுடப்பட்டதாகவும் சாட்சியத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் இது ராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கொலை எனத் தீர்ப்பளித்த நீதவான் சம்பந்தப்பட்டவர்களை நீதி மன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

திருமலை ஏ. எஸ். பி. திரு. டீ. எல். விஜயசுந்தரா, இன்ஸ்பெக்டர் திரு. கொடகம ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

## சைக்கிள் திருட்டு நகரில் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது

யாழ்நகரில் மீண்டும் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. சில தினங்களுக்கு முன்னர் 'பாஸ்' எடுப்பதற்காக யாழ் கோட்டைக்கு சென்ற ஒருவரின் சைக்கிளும் 'மர்மமான' முறையில் மறைந்துவிட்டதாம். இவர் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் தனது சைக்கிளை வைத்துவிட்டு சென்றதாகவும், இது பற்றி அங்கு காவலுக்கு நின்றவர்களிடம் கேட்ட பொழுது தமக்கு அது பற்றி தெரியாதெனவும் பதிலளிக்கப்பட்டதாம்.

கடந்த இரு தினங்களில் யாழ். நவீன சந்தைக்கருகில் மட்டும் மூன்று சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. நேற்று சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட ஒருவர் இளைஞர்களால் துரத்திச் செல்லப்பட்ட சமயம்அவர் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கப்பலில் இங்கு வருகிறது 2500 மெற்றிக் தொன் உரம்

வடபகுதி விவசாயிகளின் நலனை முன்னிட்டு இம்மாதம் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாயிரத்து ஐநூறு மெற்றிக் தொன் உரம ஏற்றிக் கொண்டு கப்பலொன்று காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வருகிறது.

கடந்த நவம்பர் மாதத்தின் பின்னர் இக்கப்பல் இங்கு வருவது குறிப்பிடத்தக்கது. ஆயிரத்து இருநூறு தொன் யூரியா, எண்ணூறு தொன் பி. மிக்ஸர், ஐநூறு தொன் ரீ. டீ. எம். எனபன இக்கப்பலில் கொண்டு வரப்படுகின்றன.

இந்த உரம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது. பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், உத்தரவு பெற்ற வியாபாரிகள் மூலமாக, இவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட பகுதி உரக்கூட்டுத்தாபன பொறுப்பதிகாரி திரு எஸ் ராமநாதன் தெரிவித்தார்.

## புளொட்டிலிருந்து நீக்கம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உறுப்பினராக இருந்த வளவன் (சற்குணேஸ்-கந்தரோடை, சுன்னாகம்) தமது ஸ்தாபன உறுப்பினர் உரிமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக புளொட் அறிவித்துள்ளது.

## நகைகளும் பணமும் கொள்ளை

கொக்குவில் கிழக்கில் உள்ள எஸ். கந்தசாமி என்றபத்தரின் வீட்டில் நேற்று முன்தினம் இரவுபத்துப்பவுண்நகைகளும், எண்ணாயிரம் ரூபா ரொக்கப் பணமும் இனம் தெரியாத சிலரால் கொள்ளையடிக்கப்பட்டன.

வாகனம் ஒன்றில் வந்த சுமார் எட்டுப்பேர் இவரின் வீட்டினுள் புகுந்து பிள்ளைகளை அறையொன்றில்பூட்டிவைத்துவிட்டு துப்பாக்கி முனையில் இக் கொள்ளையை நடாத்தியுள்ளனர்.

இவர் கூலிக்கு நகைகள் செய்து கொடுப்பவர் என்றும், அவ்வாறு செய்வதற்குகொடுக்கப்பட்ட நகைகளும் பணமுமே கொள்ளையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கிளிநொச்சி...

அப்பால் பஸ் சேவைகளை நடாத்தும் ஒவ்வொரு தடவையும் அதற்குரிய பாஸ் கிளிநொச்சி கூட்டு இராணுவ முகாமிலிருந்து பெறப்பட வேண்டுமென பணிக்கப்பட்டதாம்.

இதனையடுத்து பாஸ் பெறுவதற்கு பிரயாணிகளுடன் பஸ்கள் இராணுவ முகாமுக்கு செல்லும் போது பிரயாணிகளின் பாதுகாப்பிற்கான பொறுப்பினை குறித்த பஸ்ஸின் சாரதியும் காப்பாளருமே பொறுப்பெடுக்க வேண்டுமென இவர்களுக்கு சிலரால் பணிக்கப்பட்டதாம்.

இச்சம்பவங்களையடுத்து கிளிநொச்சி டிப்போ ஊழியர்கள் மீண்டும் அங்கு கடமைபுரிய மறுப்புத் தெரிவித்துள்ளனர். அனேகமான ஊழியர்கள் கிளிநொச்சிக்கு செல்லாது கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களில் தமது வரவுகளை பதிவு செய்து வருகின்றனர். கிளிநொச்சி டிப்போவினால் நடாத்தப்பட்ட பஸ் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

### இரண்டு ..

சென்று சில பொருட்களை எடுத்துக்கொண்டு திரும்பி வரும்போது, வழியில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த ராணுவத்தினர் இவர்களை பிடித்து விசாரித்தனர். பின்னர் மனைவிமாரை போகும்படி சொல்லி அவ்விரு கணவன்மாரையும் முகாமுக்கு கூட்டிச் சென்றனர்.

ராணுவத்துடன் இதுபற்றி தொடர்பு கொண்டபோது விசாரணை நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடக்கில்...

களின் அதிமுக்கிய முகாம்கள் இருபத்தியாறு இயங்கும் இடங்கள் பற்றி படையினருக்கு தெரியுமென்றும் இவை நிர்மூலமாக்கப்பட வேண்டிய அவசியம் தற்பொழுது எழுந்துள்ளது என இவ் அதிகாரி மேலும் சொன்னதுடன் எச்சந்தர்ப்பத்திலும் வடபகுதியிலுள்ள எந்த இராணுவ முகாமாவது மூடப்படமாட்டாதென்று உறுதிபடக் கூறியதாகவும் மேற்படி தகவல் தெரிவிக்கின்றது.

இராணுவத்தின் பதில் தாக்குதலின் போது தீவிரவாதிகளுக்கு உடந்தையாயிருக்கும் மக்களுக்கும் பாதிப்பில் பங்கு நிகழ்வது நியாயமானதே என்றும் அவர் நியாயப்படுத்தினார். இக்குறிப்பிட்ட சுற்றெல்லைக்குள் உள்ள யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு ஆபத்து ஏற்படாமல் ஆயுதப் படையினர் தவிர்த்துக் கொள்ளுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. போராளிகளின் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பதற்கு இராணுவத்திடம் தற்போது அதிநவீன ஆயுதங்கள் போதுமானவளவு இருப்பதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### கட்டைபறிச்சான்...

அவர்களை இடைமறித்து தாக்குதல் நடத்தியதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

தமது தாக்குதலால் மேலும் நிலை கொள்ள முடியாத ராணுவத்தினர் தமக்கேற்பட்ட இழப்புக்களுடன் முகாம் திரும்பியதாகவும் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வட-கிழக்கு...

தாக கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

### நயினாதீவு...

முக்கிய திருவிழாக்களின் விபரம் வருமாறு:

14ம் திகதி மஞ்சம்: 17ம் திகதி சப்பறம்; 18ம் திகதி ரதோற்சவம்; 19ம் திகதி தீர்த்தம்; 20ம் திகதி இரவு தெப்பத் திருவிழா. உற்சவத்துக்கு வருபவர்கள் தங்களுடன் அடையாள அட்டைகளையும் தவறாது கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### புலிஷேர்ட்...

அச்சமுற்றனர். சாதாரண உடையிற் காணப்பட்ட அவர் பச்சை நிறமான ரீஷேர்ட் அணிந்திருந்தார். அந்த ரீஷேர்ட்டின் இடதுபக்க மேல் மூலையில் சிகப்பு நிறத்திலான விடுதலைப் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அவர் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த வீரர்என்பது பின்னர் தெரியவந்தது.

## கைக்கெட்டியும் வாய்க்கு எட்டவில்லை

யாழ்ப்பாண பகுதியின் ஒரு பகுதிக்கு பதிவாளர் நியமனத்துக்கு தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு பதிவாளர் நாயகத்தினால் நியமனக் கடிதம் அனுப்பப்பட்டும் இன்னும் சிக்கல் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒருவரது பெயர் குறிப்பிடப்பட்டு இப்பதவி வழங்கப்பட வேண்டும் என நியமனக் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் பின்னர் அதுமேலிடத்து உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## நாடக நூல் இன்று வெளியீடு

புனித பிரான்சிஸ் அசிசியார் நாடக வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை மாலை நான்கு மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வண. பிதா ஜே. ஈ. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ். ஆயர் அதிவந். வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை பிரதம அதிதியாகவும், கிளிநொச்சி உதவி காணி ஆணையாளர் திரு. செல்லையா பத்மநாதன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சு. மோகனதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

## உ. அ. அதிபருக்கு பிரிவுபசாரம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராகக் கடந்த நான்கு வருடங்களாக கடமையாற்றி, நல்லூர் உதவி அரசாங்க அதிபராக இடமாற்றலாகிச் சென்றுள்ள திரு. கே. சண்முகநாதனுக்கு இன்று சனிக்கிழமை காலை பிரிவுபசார வைபவம் நடைபெறவுள்ளது. புதிய உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தினி சுப்பிரமணியம் தலைமையில் இவ் வைபவம் இடம்பெறுகிறது.

## கள்ள மின்வயர் எரிக்கப்பட்டது

(கரவெட்டி)

சட்ட விரோத மின்பாவனையால் எதிர்காலத்தில் ஏற்படும் பாதிப்பைக் கருத்தில் கொண்டு நெல்லியடி நகர சபையும், நெல்லியடிப் பட்டின சபையும் வெகுசன ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளுடன் கூட்டாக நேற்றுமுன்தினம் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் நெல்லியடி, கரவெட்டி, கலட்டி, வதிரி போன்ற இடங்களில் கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான மின்வயர்கள் நெல்லியடிச் சந்தியில் தீ மூட்டி எரிக்கப்பட்டன.

## பரீட்சை ஆரம்பம்

நேற்று ஆரம்பமான க. பொ. த. உயர்தரப் பரீட்சை எதுவித தடங்கலுமின்றி நடைபெற்றது. பரீட்சை மண்டபங்களின் சூழலில் பெற்றோரும், பழையமாணவரும், இளைஞர்களும் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 2-8-1986 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437